**தலைப்பு 405 – அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள் மற்றும் இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள் மற்றும் இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள் மற்றும் இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

இராஜாங்க அமைச்சு 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டமையால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக என்னால் தெரிவிக்க முடியாதுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் இராஜாங்க அமைச்சினால் மூலதனச் சொத்துக் களை கையேற்பதற்காக ரூபா 453,423 செலவிடப்பட்டிருந்த போதிலும், நிதிக் கூற்றில் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு ரூபா 183,923 எனக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 269,500 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கெமரா, மூலதனச் சொத்தொன்றாக நிதிசாரா சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கெமராவினை CIGAS மென்பொருளின் ஊடாக கணக்கீடு செய்கையில் ஏற்பட்டிருந்த தவறு காரணமாக சொத்தொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையை 2021 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு குறித்துத்துக் கொள்ளப்பட்டது. | மூலதனச் சொத்துக் களை கையேற்பதற்கான செலவினம் மூலதனச் சொத்தொன்றாக நிதி சாரா சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 272(3) இன் பிரகாரம் அனைத்து கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் குறித்த மாதம் முடிவடைந்து 6 வாரங்களுக்கு மேற்படாத காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மாதந்தோரும் அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், மீன்பிடி துறைமுகங்கள், நங்கூரமிடல் இடங்கள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 04 உப செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 804,462,191 செலவினத்துக்குரிய கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அச் செலவினத்தை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தற்போது கடற்றொழில் அமைச்சின் வசம் காணப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 272(3) இன் பிரகாரம் அனைத்து கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களையும் உரிய காலத்தில் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஒப்பந்த வேலைகளுக்குரிய பிடிகாசு மீதி ரூபா 197,226,919 ஆகக் காணப்பட்டதுடன், அதில் 1 முதல் 2 ஆண்டுகள் வரையான காலத்திற்கு உட்பட்ட ரூபா 76,219,097 வைப்பு மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான வைப்புக்கள் பதிவேடு அல்லது தனிப்பட்ட மீதிகளின் பட்டியல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்குகள் சுற்றறிக்கை 249-2016 (i) இன் பிரகாரம் பொது வைப்புக்கள் கணக்கின் காலப்பகுப்பாய்வுக்காக வழங்கப்பட்டுள்ள படிவம் III இன் படி அது தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட மீதிகளுக்குரிய பட்டியலொன்றை வழங்குவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமையால் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வைப்பு மீதிகளுக்குரிய விபரங்கள், வைப்புக்கள் பதிவேட்டின் படி அல்லது தனிப்பட்ட மீதிகளின் பட்டியலிற்கு அமைவாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| இராஜாங்க அமைச்சின் மீன்பிடி துறைமுகங்கள், நங்கூரமிடல் இடங்கள் அபிவிருத்திச் செயற்திட்டம் மற்றும் களப்புகள் அபிவிருத்தி செயற்திட்டம் ஆகியவற்றுக்குரிய 03 வங்கிக் கணக்குகளின் கட்டுநிதி மாற்றல்களுடன் தொடர்புடைய பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் படி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு மீளளிக்கப்பட வேண்டிய ரூபா 2,908,690 மொத்தத் தொகையினை திறைசேரிக்கு அனுப்பிவைக்காது துறைமுகங்கள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டிருந்தது. | அவதரிப்புடன் இனங்க முடியாதுள்ளதுடன் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கட்டுநிதிகள் உரியவாறு தீர்க்கப்பட்டுள்ளன. | ஆண்டின் இறுதியில் எஞ்சியுள்ள தொகைகளிற்காக காசோலைகளை வழங்காது அதனை திறைசேரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் குறித்த பணிக்காக மூலதனச் செலவினத்தை மேற்கொள்வதற்கு தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்திற்கு (NARA) ஒதுக்கப்பட்ட ரூபா 7,773,000 தொகை அந்த நிறுவனத்தின் மூலதனச் செலவினங்களை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த முகவர் நிலையத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்டிருந்த தெகை 64.5 சதவீதமாக காணப்பட்டமையால் ஏனைய அபிவிருத்திச் செயற்திட்டங்களுடன் ஒப்பிடுகையில் ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்கான நிதிப் பயன்பாடு குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 3.4 சதவீதமான அளவு கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக ஆராய்ச்சி நடவடிக்கைகளை எதிர்பார்த்தவாறு மேற்கொள்ள முடிந்திருக்காமையால் சேமிப்பாகியிருந்தது. ஆகையால் இலங்கை தேசிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அத்தியாவசியப் பணிகளுக்காக தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் அந்த நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிதியினை அதற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 07 மீண்டுவரும் செலவின விடயங்களுக்குரிய ரூபா 1,580,000 மொத்தமான தொகையும் 04 மூலதச் செலவின விடயங்களுக்குரிய ரூபா 1,170,000 மொத்தமான தொகையுமாக கூட்டுமொத்தம் ரூபா 2,750,000 ஆன நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்ப ட்டிருந்தது. | கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை, பதவிகள் வெற்றிட மாக காணப்படுதல், கடற்றொ ழில் அமைச்சினால் செலவினம் மேற்கொள்ளப்பட்டிந்தமை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | மதிப்பீடுகளைத் தயாரிக்கையில் மிகை நிதி ஏற்பாட் டை மேற்கொள்ளா திருத்தல் வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் பதிவேட்டின் படி 2 செலவின விடயங்களிற்காக வருடா ந்த நிதி ஏற்பாட்டில் சேமிக்கப்பட் டிருந்த தொகையான ரூபா 95,000 இனை மிகைத்து ரூபா 15,006,102 பொறுப்புக்களும் கடப்பாடுகளும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்ததுடன், வருடாந்த நிதி ஏற்பாடு மேற்கொள்ள ப்பட்டிருக்காத 151-2-3-71-2506 ஆம் இலக்க செலவின விடயத்துக்காக ரூபா 756,067 பொறுப்பு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. | 151-2-3-71-2506 ஆம் இலக்கம் என்பது இந்த அமைச்சுக்குரிய செலவின விடயம் அல்ல என்பதுடன் இந்தப் பொறுப் பானது தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இன்னும் முடிவடையாத செயற்திட்டத் திற்கு உரியதாகும். | அந்தந்த செலவின விடயங்களிற்காக ஒதுக் கப்பட்டுள்ள தொகைக்கு உட்பட்டு செலவு செய்தல் வேண்டுமென் பதுடன், நிறுவனத்திற்கு உரித்தற்ற செலவின விடயத்துக்காக பொறுப்பு ஏற்படுத்திக் கொள்ளப்ப டக்கூடாது. |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்த ரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன், அம்மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் | 2020 ஆம் ஆண்டுக்காக போதியளவு பதவியணியினர் காணப்படாமையால் முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறை யொன்றை நடைமுறைப்படுத்த முடியாது போயிருந்தது. இருப் பினும், தற்போது முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறை யொன்று நடைமுறையில் உள் ளதுடன், அதனை மீளாய்வு செய்து பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வா றான மீளாய்வொன்று மேற்கொள்ளப் பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை நிறைவேற்றியிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| இராஜாங்க அமைச்சிற்கு 2020 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை கிடைத்திருந்த திறைசேரி கட்டுநிதி தொகைகளான ரூபா 1,049,700,000 மற்றும் 1,034,400,000 அதாவது 98.5 சதவீதமானவை 2 அரசாங்க நிறுவனங்களிற்கும் 2 செயற்திட்டங்க ளிற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த துடன், முக்கியத்துவம் வாய்ந்த 8 பணிகளை நிறைவேற்றுவதற்கு இந்த இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டிரு ந்த போதிலும், அதனைக் கருத்திற் கொள்ளாது பல ஆண்டுகளாக செயற்படுத்தப்பட்டு வருகின்ற செயற் திட்டங்களுக்கு பணத்தை செலவி டுதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. | 2020.08.09 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவி த்தல் மூலம் இராஜாங்க அமைச்சின் கீழ் இனங்காணப் பட்டுள்ள விசேட முக்கியத்து வம் வாய்ந்த பணிகளில் அநேகமானவை குறித்த இரண்டு செயற்திட்டங்களாலும் நீர்ச் சீவராசிகள் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நாரா நிறுவனம் ஆகிவற்றின் செயற்பாடுகளால் மேவுகை செய்யப்படுகின்றன. | விசேட முக்கியத்து வம் வாய்ந்த பணிகளை இலக்காகக் கொண்டு அபிவிருத்திச் செயற்திட் டங்களை அமுல்படுத்து தல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் இறுதியில் பூரணப் படுத்துவதற்கு உத்தேசித்திருந்த வெல்லமங்கர மீன்பிடி துறைமுகச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதிய நிதிசார் செயன் முன்னேற்றம் ரூபா 1,720,100,000 அல்லது 70 சதவீதமாகக் காணப்பட் டதுடன் பௌதீக செயலாற்றலும் திருப்திகரமாக காணப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப் பட்டிருந்த இந்த அபிவிருத்திச் செயற்திட்டத்தின் நிர்மாண வேலை கள் தாமதமடைவதற்கு காரணம் 2020 மார்ச் முதல் மே வரை நிலவிய கொவிட் 19 நோய்த் தொற்று, நாடு முழுவதற்கும் விதிக்கப்பட்ட ஊரடங்கு மற்றும் நாடடைப்பு என்பனவாகும். | திட்டமிடப்பட்டவாறு செயற்திட்ட நடவடிக்கை களை பூரணப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) இராஜாங்க அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து 97 சதவீதத்திற்குச் சமனான ரூபா 260,097,285 தொகை தேசிய நீர்வாழ் சீவராசிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் (NAQDA) 05 அபிவிருத்திச் செயற்திட்டங்களிற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்தத் தொகையினை குறித்த பணிகளிற்காக செலவிடுதல் தொடர்பில் பின்தொடர் பரிசோதனைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆகஸ்ட் மாதத்தில் இந்த அமைச்சு புதிதாக தோற்றுவிக்கப்பட்டிருந்ததுடன், தேவையான பதவியணியினர் அக்காலப் பகுதியில் பூரணப்படுத்தப்பட்டிருக்காமையாலும் அனைத்து மேற்பார்வை நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு தேவையான உத்தியோகத்தர்கள் காணப்படாமையாலும் என்னால் தனிப்பட்ட முறையில் ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் பணிகள் முடிந்தளவு மேற்பார்வை செய்யப்பட்டன. | செயற்திட்டங்களிற்காக செலவிடப்பட்டிருந்த நிதிகள் குறித்த பணிகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை தொடர்பான தகவல்களைப் பெற்று பின்தொடர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) மேற்படி நிதி ஏற்பாடுகளிற்கு மேலதிகமாக நீர்வாழ் சீவராசிகள் அபிவிருத்தி அதிகாரசபைக்காக அபிவிருத்தி மூலதன நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 203,973,000 மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயன்முன்னேற்ற அறிக்கையின் படி இந்த நிதி ஏற்பாட்டிலிருந்து 29 செயற்திட்டங்களிற்காக ரூபா 196,200,000 தொகையினை மாத்திரம் அந்த நிறுவனம் செலவிட்டிருந்தது. மேற்கொண்டிருந்த பணிகள் எவை மற்றும் நலனாளிகள் யார் போன்ற தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக கோவையொன்று பேணப்படாதிருந்ததுடன், குறித்த நிதிகள் உரிய அபிவிருத்திப் பணிகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை தொடர்பில் பின்தொடர் பரிசோதனை மேற்கொண்டிருந்தமையினை அவதானிக்க முடிந்திருக்கவில்லை. | - மேற்படி - | செயற்திட்டங்களிற்கு செலவிட்ட நிதிகள் உரிய பணிகளிற்காக பயன்படுத்தப்படுதல் மற்றும் நலனாளிகள் போன்ற விபரங்கள் மற்றும் செயன்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு பின்தொடர் பரிசோதனை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |